# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2155/31 - 2019 දෙසැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2019.12.27

*2155/31 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் ஹோமாகம பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

ஹோமாகம பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், ஹோமாகம பிரதேச சபையின் 05 ஆம் இலக்க நாவலமுல்ல வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட ஜயமுனி திலான் ரந்திம குணரத்ன என்பவர் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையற்றவரல்லாத வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான ஹோமாகம பிரதேச சபையின் 05 ஆம் இலக்க நாவலமுல்ல வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக குருப்பு ஆரச்சிகே சமிந்த பிரியதர்சன குருப்பு ஆரச்சி என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது ஹோமாகம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சுது தேவகே சானிக அனுருத்த ரூபசிங்க ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு குருப்பு ஆரச்சிகே சமிந்த பிரியதர்சன குருப்பு ஆரச்சி என்பவர் ஹோமாகம பிரதேச சபையின் 05 ஆம் இலக்க நாவலமுல்ல வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். டீ. எஸ். ஏ. ரூபசிங்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஹோமாகம பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு,
*2019, திசெம்பர் 27.*

*01-361*